

# அரசு பள்ளி மாணவர்கள் 285 பேர் மெட்ரோ ரெயிலில் இலவச பயணம்

சென்னை, மார்ச்.16–

மெட்ரோ ரெயில் மற்றும் மெட்ரோ ரெயில் நிலையங்களில் உள்ள வசதிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து அரசு மற்றும் மாநகராட்சி பள்ளி மாணவ–மாணவிகள் அறிந்து கொள்ளும் வகையில் கல்விப்பயணம் என்ற பெயரில் அவர்களை இலவசமாக மெட்ரோ ரெயிலில் அழைத்து செல்லும் திட்டத்தை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. சென்னை பெருநகரப்பகுதியில் உள்ள அரசு மற்றும் மாநகராட்சி பள்ளி மாணவ–மாணவிகள் மட்டுமே இதுவரை இந்த திட்டத்தின் கீழ் இலவசமாக அழைத்து செல்லப்பட்டு வந்தனர். வெளிமாவட்டங்களை சேர்ந்த மாணவ–மாணவிகளும் இந்த திட்டத்தின் கீழ் பயன்பெற மெட்ரோ ரெயில் நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டது. அதன்படி திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சீபுரம், திருவண்ணாமலை, திருச்சி ஆகிய மாவட்டங்களை சேர்ந்த அரசு பள்ளி மாணவ–மாணவிகள் 285 பேர் மெட்ரோ ரெயிலில் இலவசமாக அழைத்து செல்லப்பட்டனர்.

மெட்ரோ ரெயிலில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து வரும் மாணவ–மாணவிகளை இலவசமாக அழைத்து செல்ல விரும்பினால் pro@cmrl.in, ampr.cmrl2@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவல் மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.